# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## OS.No. 181/2021

| | | | |
|---|---|---|---|
| Name | : | R. மைக்கேல் | **Pw 1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of July 2024.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 7 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். கடந்தா 24.05.2016 ஆம் தேதி பிரதிவாதி வாதிக்கு சுகிஸ்தலிகிதமாக பிறப்புவித்துக்கொடுத்த பணப்பற்று ஆவணம் ( ரூ.20/- மதிப்பிலான நீதிமன்ற சாரா முத்திரைத்தாளில் உள்ளது) அசல் **வா.சா.ஆ.1** ஆகும். கடந்த 31.07.2018 ஆம் தேதி பிரதிவாதி வாதிக்கு சுகிஸ்தலிகிதமாக ரூ.25,00,000/- செலுத்திப்போவதாக ஒப்புக்கொண்டு பிறப்புவித்துக்கொடுத்த அத்தாட்சி - அசல் **வா.சா.ஆ.2** ஆகும். கடந்த 18.09.2020 ஆம் தேதி இந்த பிரதிவாதி சுகிஸ்தலிகிதமாக வாதிக்கு தொகை செலுத்திப்போவதாக பிறப்புவித்துக்கொடுத்த ஒப்புதல் அத்தாட்சி -அசல் **வா.சா.ஆ.3** ஆகும். கடந்த 01.04.2016 ஆம் தேதி பிரதிவாதியின் பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணம்

**வா.சா.ஆ.4** ஆகும். கடந்த 14.02.2021 ஆம் தேதி வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.5** ஆகும். கடந்த 16.02.2021 ஆம் தேதி பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதை காண்பிக்கக்கூடிய அஞ்சல் அலுவலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.6** ஆகும். கடந்த 26.02.2021 ஆம் தேதி பிரதிவாதி அவரின் வழக்கறிஞ்ர மூலம் வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு கடித உரையுடன் அசல் **வா.சா.ஆ.7** ஆகும். பிராதுப்படி தீரப்பாக வேண்டும்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

**ஓம்/−S.மனோஜ்குமார்**
**கூடுதல் மாவட்ட நீதிபதி**
**தென்காசி**